Chenkaantal
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

Volume - 1, Special Issue - 1, January 2022 E-ISSN: 2583-0481

# Feminism in *Mulkambikalal Koodupinnum Paravai*

P.Janci, Ph.d Research Scholar, Department of Tamil, Fatima College, Madurai.
ORCiD: https://orcid.org/0000-0002-2315-7145
DOI: 10.5281/zenodo.6622793

## Abstract

*This essay on feminism as Mulkambikalal Koodupinnum Paravai (a bird that builds nest of barbed wire) explains about the denial of women's rights and platform in this social setting, the way in which feminist voices are regenerated in a hidden way, and the way in which feminist expressions of emotion and the breakdown of the conventions that this society has made for women under patriarchy. Women have been subjected to oppression and repression in this social system over time. Her rights are deprived. This society has given various definitions against the denied and hidden woman of equality and portrayed her as a symbol of sacrifice through gender and tenderness. This society, which portrays woman as a goddess, a flag and a peacock, has forgotten to see her as a woman. The life of the female must be given the equal rights in the same way as the male. Many feminists have been emphasizing feminism in the pursuit of gender equality. The purpose of this article is to highlight the feminist ideas found in Malati Maitri's collection a bird that builds nest of barbed wire', which focuses on feminism.*

**Keywords:** Feminism, 'Mulkambikalal Koodupinnum Paravai', Marabumatram.

## References

[1] Jayaseeli, K. *Thilakavathiyin Puthinangalil Penniyam*. The Parker publishers, 2006
[2] Malathi Maithri, *Mulkambikalal Koodupinnum Paravai*, Anangu Feminist Publication, 2017.
[3] Panchangam, K. *PenMozhi Punaiu*, Kaviyapathipagam, Chennai- 1999
[4] Prema, R. *Pen Eluththukkalinarasial*, Ariupathipagam, 2007

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

செங்காந்தள்

அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்



மலர் - 1, சிறப்பிதழ் 1, தை 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# முள்கம்பிகளால் கூடுபின்னும் பறவை உணர்த்தும் பெண்ணியம்

**பா.ஜான்சி,** பகுதிநேர முனைவர்பட்ட ஆய்வாளர், பாத்திமா கல்லூரி, மதுரை.
ORCiD: https://orcid.org/0000-0002-2315-7145
DOI: 10.5281/zenodo.6622793

**ஆய்வுச்சுருக்கம்**

*'முள்கம்பிகளால் கூடுபின்னும் பறவை' உணர்த்தும் பெண்ணியம் – என்ற இவ்வாய்வு கட்டுரை, இச்சமூக அமைப்பில் பெண்ணுக்கான உரிமையும், தளமும் மறுக்கப்பட்டு, மறைக்கப்பட்ட நிலையில் பெண்ணியக்குரல்களின் வழி அது மீட்டுருவாக்கம் பெறுவதையும் பெண்ணின் உணர்வுநிலை வெளிப்பாட்டையும் பெண்ணினத்திற்கு இச்சமூகம் வழிவழியாகச் செய்த மரபுக்கட்டுப்பாடுகளை உடைக்கும் நிலையினையும் விளக்குவதாக, அமையக்காணலாம். பெண் காலங்காலமாக இச்சமூக அமைப்பில் ஒடுக்குமுறைக்கும், அடக்குமுறைக்கும் ஆளாகிவருகிறாள். அவளுக்கான உரிமைகள் யாவும் கானல் நீராகவே காட்சிப்படுத்தப்படுகிறது. சமவுரிமை மறுக்கப்பட்ட, மறைக்கப்பட்ட பெண்ணுக்கெதிராய் இச்சமூகம் பல்வேறு வரையறைகளை வழங்கி பெண்மை, மென்மை என தியாகத்தின் அடையாளமாக சித்திரப்படுத்தியது. பெண்ணைத் தெய்வமாகவும், கொடியாகவும், மயிலாகவும் காட்சிப்படுத்தும் இச்சமூகம் அவளைப் பெண்ணாகப் பார்க்க மறந்தேவிட்டது. ஆணுக்கான வெளிப்போலவே பெண்ணுக்கான வெளியும் உருவாக்கப்படல் வேண்டும். பெண் சமவுரிமைப் பெறவேண்டும் என்னும் நோக்கில் பெண்ணியவாதிகள் பலரும் பெண்ணியத்தை வலியுறுத்தி வருகின்றனர். அவ்வகையில் பெண்ணியத்தைக் கருப்பொருளாகக் கொண்டு கவிபுனைந்து வரும் மாலதி மைத்ரியின் 'முள்கம்பிகளால் கூடுபின்னும் பறவை' என்னும் தொகுப்பில் காணப்படும் பெண்ணியக்கருத்துக்களை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின்நோக்கமாகும்.*

**கருச்சொற்கள்:** பெண்ணியம், முள்கம்பிகளால் கூடுபின்னும் பறவை, மரபுமாற்றம்.

## முன்னுரை

பெண் காலங்காலமாக இச்சமூக அமைப்பில் ஒடுக்குமுறைக்கும், அடக்குமுறைக்கும் ஆளாகிவருகிறாள். சமவுரிமை மறுக்கப்பட்ட பெண்ணுக்கெதிராய் இச்சமூகம் பல்வேறு வரையறைகளை வழங்கி பெண்மை, மென்மை என தியாகத்தின் அடையாளமாக சித்திரப்படுத்தியது. பெண்ணைத் தெய்வமாகவும், கொடியாகவும், மயிலாகவும் காட்சிப்படுத்தும் இச்சமூகம் அவளைப் பெண்ணாகப் பார்க்க மறந்தேவிட்டது. ஆணுக்கான வெளிப்போலவே பெண்ணுக்கான வெளியும் உருவாக்கப்படல் வேண்டும். பெண் சமவுரிமைப் பெறவேண்டும் என்னும் நோக்கில் பெண்ணியவாதிகள் பலரும் பெண்ணியத்தை வலியுறுத்தி வருகின்றனர். அவ்வகையில் பெண்ணியத்தைக் கருப்பொருளாகக் கொண்டு கவிபுனைந்து வரும் மாலதி மைத்ரியின் 'முள்கம்பிகளால் கூடுபின்னும் பறவை' என்னும் தொகுப்பில் காணப்படும் பெண்ணியக்கருத்துக்களை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின்நோக்கமாகும்.

## பெண்ணியம்

தாய்வழிச் சமூகத்தில் முதன்மைப்பெற்று விளங்கியப்பெண், தந்தைவழிச் சமூகத்தில் தன்

முக்கியத்துவத்தினை இழக்கத் தொடங்கியதுடன் பல்வேறு சமூகவரையறைகளுக்கும் உட்பட்டு அடிமைபடுத்தப்பட்டாள்.

**"தந்தைவழிச் சமுதாயம் தன் மேல் சுமத்தியுள்ள அடையாளங்களை அழிக்க வேண்டுமென்றால், பெண் தனக்கான மொழியை உருவாக்க முயலவேண்டும். மொழி உலகிற்குள் இவள் தன்னுடைய அசைக்க முடியாத ஆற்றலைப் பாய்ச்ச வேண்டும்" (*பெண்மொழிபுனைவு*, ப.69)**

பெண்ணுக்கான உரிமையினை மீட்டெடுக்க பெண்ணியவாதிகள் பல்வேறு சமூக கருத்தாக்கங்களை உருவாக்கத் தொடங்கினர்.

**"மரபு என்பது விலங்காகப் பெண்களை இறுக்கும்போது அதை உடைத்தெறிந்து விட்டு வெளியே வந்து, தம் வாழ்வைத் தீர்மானிக்கும் சக்தியாகப் பெண்கள் உருப்பெற வேண்டும் என்பதே பெண்ணியவாதிகளின் உரத்த குரலாக நாளும் ஒலித்துக் கொண்டிருக்கின்றன" (இரா.பிரேமா,பெண் எழுத்துகளின் அரசியல், ப.33)**

பெண்ணியவாதிகளின் இந்நாதம் பெண்களை விழிப்படையச் செய்தது. தனக்கான உலகைத்தானே அமைப்பதென பெண்ணுலகம் தளைப்படத் தொடங்கியது.

**தியாகச்சுடர்**

பெண்ணைத் தாய்மையின் திருவுரு, மென்மையின் உறைவிடம், தியாகச்சுடர் என்று அவளைப் பிறருக்காக வாழப் பழக்குகிறது இச்சமூகம். மெழுகு ஒளிகொடுத்துத் தன்னை உருக்குவதைப் போல பெண்ணும் தன்னைத் தொலைத்து பிறருக்காக வாழும் நிலையே நவீன யுகத்திலும் தொடர்கிறது.

**"பிறப்புக்கும் இறப்புக்குமிடையில்**
**ஊனைச் சீழாய் நிரப்பி எழுதிய**
**புராண ஏட்டின்…"**

என்பதன் வழி பெண்ணுக்கான கற்பி தங்கள் பெண்ணை தெய்வமாக, சமையல் காரியாக, மகிழ்ச்சித் தருவளாக, வேலைக்காரியாக, தாயாக என ஏதோ ஒன்றாக இருக்கக் கற்றுத் தந்துள்ளதே தவிர அவளை, அவளாக வாழவிட்ட தேயில்லை. பிறப்புக்கும் இறப்புக்குமிடையில் இந்தச் சமூகக்கட்டமைப்பு அவளுக்காகக் கட்டியெழுப்பிய ஒரு மணிமண்டபமே தியாகச்சுடரென்பது.

**"பாழின் ஊற்றை நிரந்தரமாய்**
**அடைத்து மூடப்பழகு**
**அதுவரையில்**
**தப்பிப் பிறக்கும் ஆணை**
**சிசுவில் கொல்லும்**
**தந்திரம் பழகு**
**கொலையைக் காவியமாக்கும்**
**கலையைப் பழகு"**

என்ற வரிகள் இத்தகைய தவறான கட்டமைப்புகளை மாற்றி அமைக்கவேண்டிய தன் அவசியத்தைச் சுட்டிக்காட்டுகிறது.

**குடும்ப வன்முறை**

பெண் எப்போதும் தனக்காய் வாழாது தன் குடும்பத்திற்காய், குழந்தைக்காய், கணவனுக்காய்

வாழ்கிறாள். பெண், குடும்பம் என்ற அமைப்பால் தன் சுயத்தை இழந்து, தனக்கானப் பாதையை மறந்து வாழவேண்டிய நிலையில் இருக்கிறாள்.

**" வரதட்சணைக் கேட்காது**
**போதவில்லையென**
**மண்ணெண்ணையால் கொளுத்தாது…**
**அம்மாவின் கைமணம் கூடலையென**
**முகத்தில் தட்டெறியாது**
**மலடியெனத் துரத்தாது"**

என்னும் வரிகள் இந்த ஆணாதிக்கச் சமூகம் பெண்ணுக்கு வரதட்சணையின் பெயரில் செய்துள்ளக் கொடுமைகளை விளக்குகிறது. மேலும், சமையல் சரியில்லையென்று திட்டுவதும், குழந்தையில்லையென்று துரத்துவதும் என பெண்ணுக்கு இந்த ஆதிக்கச்சமூகம் தந்த அத்தனை கொடுமையிலிருந்தும் வெளிவர சுயமாக வாழுதலே சிறந்தது என விளக்குகிறது இக்கவிதை. ஆண்களற்ற இல்லறமே பெண்களுக்கு அமைந்தும் விடலாம்.

**எதிர்பார்ப்பும், ஏமாற்றமும்**

ஒவ்வொரு பெண்ணுக்கும் தனக்கெனத் தன் குடும்பவாழ்வு சார்ந்து ஒரு கனவிருக்கும். தனக்கான வாழ்க்கைத்துணை இப்படியெல்லாம் இருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு அனைவருக்கும் நிறைவேறுவதில்லை.

**"காப்பிப் போட்டு எழுப்பும்**
**எம்ஜிஆர் இன்னும்**
**பிறக்காமல் போனது தான்**
**வாணிஸ்ரீயின் காவிய சோகம்"**

என்னும் வரிகள் பெண்களின் எதிர்பார்ப்பினையும், காலம்காலமாக சமையலறை பெண்ணுக்கானது என்ற வரையறை மாற்றத்தினையும் எடுத்துரைக்கிறது.

**"வாய்த்ததுதேடியதுவரமெல்லாம்**
**டாஸ்மாக்கில்வாந்தியெடுக்கும்**
**பட்சணத்தட்டெடுக்கும்**
**எம்ஜிஆர்தான்"**

என்ற வரிகள் குடிகாரனாக இருந்தாலும் அவனோடு வாழ்ந்தேயாக வேண்டும் என்ற சமூகக்கட்டமைப்பினை எள்ளி நகையாடுவதாக உள்ளது. குடிபோதையில் அவன் செய்வதையெல்லாம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற நிலையில் பெண்கள் இருப்பதனை உணர்த்துகிறது.

**சாதிய வன்முறை**

பெண்ணினம் எல்லாவகையிலும் ஒடுக்கப்பட்டுள்ள நிலையில் சமூகத்தால் சாதியரீதியாக ஒடுக்கப்பட்ட இனத்து பெண்களின் வேதனையைச் சொல்லில் வரையறுக்கமுடியாது.

**"தலித் சகோதரியின் அம்மண ஊர்வலத்தில்**
**பாரத மாதாவுக்குஜே**
**கோஷமிட மறுக்கும் தேசதுரோகி"**

என்னும் வரிகள் பெண்ணாய் ஒடுங்கி சாதியத்தால் அடங்கி அடக்குமுறைகளால் காயப்பட்ட பெண்ணின்நிலையினை விளக்குகிறது. சாதிக் கலவரங்களில் பெண்களின் நிலை மிகவும் வேதனைக்குரியதாகிறது. பெண்ணுறுப்பின் மீது வன்முறைகள் செய்து மகிழும் இவ்வுலகம் எத்தனை வேதனைக்குரியது. பெண் என்பதாலேயே அவள் ஏற்கவேண்டிய கொடுமைகள்பெரியது. கலவரமாகட்டும், படையெடுப்பாகட்டும் பெண்கைப் பற்றப்பட்டு அவமானங்களைச் சந்திக்கும் இழிநிலையே தொடர்ந்து நடைபெறுகிறது.

**பாலியல் துன்புறுத்தல்**

எண்ணற்ற பாலியல் வன்கொடுமைகள் பெண்ணுக்கெதிராக நாளும் நிகழ்ந்து வருகின்றன. இத்தகைய வன்கொடுமையைச் சாடும் மாலதி மைத்ரி

**“வாயிலும் குதத்திலும்**
**கதறக்கதறத் திணித்தப் பின்னும்**
**மிச்சமிருக்கும் உயிர்த்திருக்கும் வெறி”**

என பெண்களின் வலியை வேதனையைச் சுட்டி அதற்கானதீர்வாக **“வெட்டிக் குறியறுத்து மீண்டும் ஒரு முறை என்னையே உருவாக்கும்”** என கண்டனக்குரல் எழுப்புகிறார்.

**முடிவுரை**

பெண்ணுக்கு இந்த ஆதிக்கச் சமூகம் தந்த அத்தனை கொடுமையிலிருந்தும் வெளிவர சுயமாக வாழுதலே சிறந்தது என விளக்குகிறது இக்கவிதை. ஆண்களற்ற இல்லறமே பெண்களுக்கு அமைந்தும்விடலாம். பெண்ணுக்கெதிராய் இச்சமூகம் பல்வேறு வரையறைகளை வழங்கிபெண்மை, மென்மை என தியாகத்தின் அடையாளமாக சித்திரப்படுத்தியது. பெண்ணைத் தெய்வமாகவும், கொடியாகவும், மயிலாகவும் காட்சிப்படுத்தும் இச்சமூகம் அவளைப் பெண்ணாகப் பார்க்க மறந்தே விட்டது. பெண்ணுக்கான உரிமையினை மீட்டெடுக்க பெண்ணியவாதிகள் பல்வேறு சமூககருத்தாக்கங்களை உருவாக்கத்தொடங்கினர். பெண்ணியவாதிகளின் இந்நாதம் பெண்களை விழிப்படையச்செய்தது. தனக்கான உலகைத்தானே அமைப்பதென பெண்ணுலகம் தளைப்படத் தொடங்கியது.

**துணை நூற்பட்டியல்**

[1] பஞ்சாங்கம், க. *பெண்மொழி புனைவு*,காவ்யா பதிப்பகம், சென்னை-1999.

[2.] பிரேமா. இரா. *பெண்எழுத்துகளின்அரசியல்*, அறிவு பதிப்பகம், 2007.

[3] மாலதி மைத்ரி. *முள்கம்பிகளால் கூடுபின்னும் பறவை.* அணங்கு பெண்ணியப் பதிப்பகம், 2017.

[4] ஜெயசீலி, க. *திலகவதியின் புதினங்களில் பெண்ணியம்.* தி பார்கர் பதிப்பகம், 2006.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.